பக்கங்கள்:-24

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 24 | சனிக்கிழமை | 08.03.2025 | அதிர்வு 216 |
|---|---|---|---|---|---|

## ஆசிரியை ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு!

கிளிநொச்சி, பளை – வேம்படிக்கேணியில் கிணற்றிலிருந்து ஆசிரியை ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தனிநபருக்குச் சொந்தமான 07



# வடக்கில் உள்ள தொழிற்சாலைகள் அனைத்தையும் மீள இயக்குவோம்

### காங்கேசன்துறையில் கைவிடப்பட்ட நிலையிலுள்ள சீமெந்து தொழிற்சாலையை நேற்று நேரில் பார்வையிட்ட பின்னர் அமைச்சர் சந்திரசேகர் இப்படி தெரிவிப்பு


(எஸ்.நிதர்ஷன்)

“தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாகிய நாம் நாட்டில் இருக்கின்ற அனைத்து தொழில்துறைகளையும் மேம்படுத்துகின்ற வேலையை முன்னெடுத்து வருகின்றோம். அந்த வேலையை முன்னெடுக்கும்போது வடக்கு மாகாணத்தில் கூடுதல் கவனத்தைச் செலுத்துகின்றோம். வடக்கில் உள்ள தொழிற்சாலைகள் அனைத்தையும் மீள இயக்கியே தீருவோம்.”

- இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். 06



# ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார்? ஞானசார தேரரிடம் உடன் விசாரணை நடத்துக!



### சி.ஐ.டியிடம் இலஞ்ச, ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பினர் முறைப்பாடு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குலுடன் தொடர்புடைய பல விடயங்களை தாம் அறிந்திருப்பதாக ஞானசார தேரர் தெரிவித்த கருத்து தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இலஞ்ச, ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பால் நேற்று வெள்ளிக்கிழமை முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார் என்பது மற்றும் அதனுடன் தொடர்புடைய பல விடயங்களைத் தாம் அறிந்திருப்பதாக 06




இது, வடக்கில் அரச நிர்வாக மட்டத்தில், வெளியே தெரியாமல் – சத்தம் சந்தடியின்றி – சிண்டைப் பிய்த்துக் கொள்ளும் விதத்தில் கட்டவிழும் ஒரு விவகாரம் பற்றிய தகவல்.

இன்றைய காலை முரசில் பிறிதொரு பக்கத்தில் ‘யாழ் மாவட்டத்துக்கு வந்து சேர்ந்த மொத்த நிதியில் 2019 இல்தான் அதிக ம் திருப்பி அனுப்பப்பட்டதாம்!’ என்ற தலைப்பில் ஒரு செய்தி பிரசுரமாகி உள்ளது. மேலோட்டமாகப் பார்த்தால் அதில் பெரிய விவகாரம் ஒன்றுமில்லை .ஆனால் ஊடுருவிப் பார்த்தால் சில விடயங்கள் தெரியும்.

இப்போது ஆளுநராக இருக்கும் நா.வேதநாயகன் முன்னர் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்தவர். அப்போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக இருந்த அங்கஜன் எம்.பியோடு முரண்பட்டுக் கொண்டு மூன்று மாதம் முன்னதாகவே யாழ். அரச அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றவர். அப்போதைய ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜனின் 06





# பெண்களின் உரிமைகளை ஒவ்வொருவரும் மதித்தால் சமூக மாற்றம் தானாகவே ஏற்படும்

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் சுட்டிக்காட்டு

பெண்களின் உரிமைகளை மதிப்பதற்கு ஒவ்வொருவரும் தயாராகினால் சமூக மாற்றம் தானாகவே ஏற்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு நடத்திய சர்வதேச மகளிர் தின விழா சாவகச்சேரி நகர சபை பொன் விழா மண்டபத்தில் அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பெண்களுக்கு எதிரான துர்நடத்தைகளில் ஈடுபடுபவர்களும், வன்முறைகளில் ஈடுபடுபவர்களும் சட்டத்தின் பிடியிலிருந்தும், மேலதிகாரிகளின் உதவிகளுடன் தப்பிக்கும் நிலைமையும் காணப்படுகின்றது. பெண்களுக்கு எதிரான இத்தகைய செயற்பாடுகளை இல்லதொழிக்க அனைவரும் ஓரணியில் கைகோர்த்து குரல் எழுப்பவேண்டும்.

பெண்களின் உரிமைகள் இன்றும் மறுக்கப்படுவதனால்தான் மகளிர் தினத்தை நாம் கொண்டாடிக்கொண்டிருக்கின்றோம். இன்றைய தினம் வெளியிட்டு வைக்கப்பட்ட கொள்கை ஆவணம் முக்கியமானது.

இன்று பெண்கள் சமூகத்தில் குறிப்பாக வேலைத்தளங்களிலும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். இதற்கு மேலதிகமாக பாடசாலைகளிலும் மாணவிகள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றார்கள். ஊடகங்களைப் பார்க்கின்ற உங்களுக்கு நிச்சயம் இவை தெரிந்திருக்கும்.

எமது சமூகத்தில் தற்போது இடம்பெறும் சமூகப்பிறழ்வுகளால் அதிகம் பாதிப்புக்குள்ளாவதும் பெண்களே. உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையான ஆண்களால் பல பெண்கள் துர்நடத்தை உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். சொந்தச் சகோதரிகளைக்கூட அவர்கள் இவ்வாறு துர்நடத்தைக்கு உள்ளாக்கியுள்ள சம்பவங்கள் வடக்கில் பதிவாகியுள்ளன.

வெளியில் இவற்றைச் சொன்னால் தமது எதிர்காலம் பாதிப்புக்கு உள்ளாகும் என அஞ்சி பல பெண்கள் வெளிப்படுத்த தயங்குகின்றனர். இவற்றை முறியடிக்க வேண்டும். இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பெண்களுக்கு எதிராக வன்முறைகளிலோ, துர்நடத்தைகளிலோ ஈடுபடுவர்கள் தராதரம் பாராமல் தண்டிக்கப்பட வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் மிக முக்கியமாக நாங்கள் ஒவ்வொரும் எங்களுக்கு உறுதிபூணவேண்டும். நாங்கள் ஒவ்வொருவரும் மாறினால் சமூகம் மாற்றமடையும். பெண்களின் உரிமைகளை மதிப்பதற்கு ஒவ்வொருவரும் தயாராகினால் சமூக மாற்றம் தானாகவே ஏற்படும்.” – என்றார்.
















# வீட்டுத்திட்டம் இடைநிறுத்தப்பட்டதால் பெருமளவான பொதுமக்கள் பாதிப்பு

## ரவிகரன் எம்.பி சபையில் தெரிவிப்பு




"கடந்த 2018ஆம் ஆண்டு அப்போதைய வீடமைப்பு அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாஸவினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டம் அரசாங்கம் மாறியதன் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் முல்லைத்தீவு, வவுனியா மன்னார் உள்ளிட்ட வன்னிப்பகுதிகளிலும், வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்."

– இவ்வாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற 2025ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத்திட்டத்தின் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 2018 இல் தற்போது எதிர்கட்சித் தலைவராக பதவி வகிக்கும் சஜித் பிரேமதாச வீடமைப்பு அதிகாரசபையின் அமைச்சராக பதவி வகித்த சந்தர்ப்பத்தில் அக்காலப் பகுதியில் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டம் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதியில் வெள்ள இடர்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், யுத்தத்தினால் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் தங்கி வாழ்ந்து மீள்குடியேற்றப்பட்டவர்களுக்கும், புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள், வறுமை நிலையில் வாழ்ந்த குடும்பங்களை சார்ந்தவர்களுக்கும், அனாதைசிறுவர்கள், யுத்தத்தின்போது கணவனை இழந்த பெண்தலைமைக் குடும்பங்களைசார்ந்தவர்கள் என்ற அடிப்படையில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட அடிப்படை வசதிகளற்ற, தற்காலிக வீடுகளில் கையறுநிலையில் வாழ்கின்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு 7,50,000 ரூபா பெறுமதியான வீடானது இரண்டுமாத காலப்பத்திக்குள் கட்டிமுடிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் வழங்கப்பட்டது.

இருப்பினும் அரசாங்கம் மாற்றப்பட்டதன் விளைவாக இத்திட்ட நடவடிக்கையானது இடைநிறுத்தப்பட்டு கேட்பாரற்று கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இதனைத்தொடர்ந்து கடந்த 2019ஆம் ஆண்டு காலப் பகுதியில் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களை தவிர்த்தே வழங்கப்பட்டது. அரசாங்கள் மாறினாலும் இத்திட்டம் தொடர்பாக எவ்விதமான முன்னகர்வுகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க விடயமாகும்.

இவ்வாறாக முல்லைத்தீவு, மன்னார், வவுனியா உள்ளிட்ட வன்னியில் உள்ளவர்களும் வடக்கு, கிழக்கில் உள்ளவர்களும் இந்த வீட்டுத்திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இது உடனடியாக தீர்க்கப்படவேண்டிய விடயமாகும். இதில் பாதிக்கப்பட்ட மக்கள் பயனடைய வேண்டும். என்ற உயரிய குறிக்கோளுடன் இந்த விடயத்தை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்." – என்றார்.

# காட்டு யானைகள் ரயிலில் மோதுவதை தவிர்ப்பதற்காக ஏ.ஐ. தொழில்நுட்பம்



காட்டு யானைகள் ரயிலில் மோதுவதை தவிர்ப்பதற்காக ஏ.ஐ. (Artificial Intelligence) தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்ட உபகரணமொன்றை பரிசோதிப்பதற்கு போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாளை முதல் இந்த உபகரணம் பொருத்தப்பட்ட ரயிலொன்று கொழும்பு முதல் மட்டக்களப்பு வரை சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பிரதியமைச்சர் ப்ரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

பரிசோதனையின் பின்னர் மட்டக்களப்பு மார்க்கத்தில் இரவு நேரங்களில் சேவையில் ஈடுபடும் அனைத்து ரயில்களிலும் மேற்படி உபகரணம் பொருத்தப்படவுள்ளது.

ரயில்களில் மோதுண்டு இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் மாத்திரம் 09 யானைகள் உயிரிழந்துள்ளன.

மட்டக்களப்பு ரயில் மார்க்கத்தின் கல்ஓய மற்றும் பளுகஸ்வெவ இடையிலான பகுதியில் 20 கிலோ மீற்றர் அளவிலான பிரதேசத்தில் யானைகள் ரயிலில் மோதுவதற்கான அதிக அளவு அபாயம் காணப்படுவதாக பிரதியமைச்சர் ப்ரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

இதனைக் குறைப்பதற்காக புதிய உபகரணத்தை எஞ்ஜினில் பொருத்தி, இரவு நேரங்களில் ரயிலை சேவையில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட பேராசிரியர் லிலந்த சமரநாயக்க உள்ளிட்ட தரப்பினரால் இந்த உபகரணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி தரிந்து வீரகோன், நலீன் ஹரிஸ்சந்திர மற்றும் பேராசிரியர் காமினி திசாநாயக்க உள்ளிட்ட சிலரும் இதில் பங்களிப்பினை வழங்கியுள்ளனர்.





# ‘க்ளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டத்தின் எதிர்கால திட்டங்கள் குறித்து ஆராய்வு!

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும் “க்ளீன் ஸ்ரீலங்கா” செயலணி உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று) நடைபெற்றது.

இந்த சந்திப்பானது ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

“க்ளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

சமூக, சுற்றாடல் மற்றும் ஒழுக்கநெறி விழிப்புணர்வு மூலம் சமூகத்தை சிறந்த நிலைக்கு உயர்த்தும் நோக்கத்தை அடைய, கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தைத் திட்டமிடுதல், வழிநடத்தல் மற்றும் செயற்படுத்துதல் க்ளீன் ஸ்ரீலங்கா செயலணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.










# அரச சேவையில் முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் நியமனம்

7 ஆண்டுகளுக்குப் பின்னர் அரச சேவையில் முகாமைத்துவ உத்தியோகத்தர்களை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, மே மாதத்தில் இதற்கான திறந்த போட்டிப் பரீட்சை நடத்தப்படும் என பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோக பண்டார தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டு நடத்த திட்டமிடப்பட்டிருந்த போட்டிப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் இந்த பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இதற்காக 1 லட்சத்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், 2200 பேர் அரச சேவையில் இணைக்கப்பட உள்ளனர்.

தற்போது முகாமைத்துவ அதிகாரிகளுக்கான 4,000 இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளன என பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இறுதியாக நிர்வாக அதிகாரிகள் பொது சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆண்டு 2018 என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐந்து லட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை



இந்த வருடத்தின் தொடக்கத்திலிருந்து, இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 5 லட்சத்தை கடந்துள்ளது.

அதன்படி, இன்றுவரை 530,746 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் 5 நாட்களில் மட்டும் 37,768 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரவணைப்போடு யாழ் மேலதிக அரசாங்க அதிபராக மருதலிங்கம் பிரதீபன் பதவியேற்ற சில காலத்திலேயே வேதநாயகன் அரச அதிபர் பதவியில் இருந்து விலகி முற்கூட்டியே ஓய்வில் செல்ல வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

இப்போது வேதநாயகன் வடக்கு மாகாண ஆளுநர். அவரின் நிர்வாகத்தின் கீழ் யாழ் அரச அதிபர் பொறுப்பில் பிரதீபன். இருவருக்கும் இடையில் வெளியே தெரியாத ஓர் அக்கப்போர் நீடிப்பதாக பிற அரச அதிகாரிகள் கூறுகிறார்கள்.

வடக்கிற்கு அனுப்பப்பட்ட நிதியில் எவ்வளவு பணம் பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்பதை வருட ரீதியாகக் கணக்கெடுத்து அனுப்பும்படி நாடாளுமன்ற செயலாளர் வடக்கின் சகல மாவட்டங்களின் அரசு அதிபர்களையும் கோரியிருக்கிறார்.

அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்ட விவரத்தை யாழ். அரசு அதிபர் பிரதீபன் இப்போது அனுப்பி வைத்துள்ளார். அதில் கடந்த 16 ஆண்டுகளில் வேதநாயகன் யாழ். அரசு அதிபராக இருந்த 2019இல் தான் அதிகம் நிதி திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்று யாழ் அரசு அதிபர் பிரதீபன் இப்போது சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இதன் விளைவு என்ன வடிவத்தில் பிரதிபலிக்கும் என்பதை இனித்தான் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

\+ + +

இலங்கைத் தமிழரசு கட்சி வரும் உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பில் போட்டியிடுவதற்கான சாத்தியம் குறித்து கோடி காட்டி இருக்கிறது. அந்தத் திட்டத்திற்குக் கொழும்புப் பகுதியில் கணிசமான வரவேற்பு இருப்பதாக இலங்கைத் தமிழரசு கட்சியின் கொழும்புக் கிளை கூறுகிறது. கொழும்பில் இம்முறை போட்டியிடுவதா என்பது குறித்து நாளை வவுனியாவில் கூடவிருக்கும் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு ஆராய்ந்து முடிவு செய்யும் என்று கொழும்புக்கு கிளை தெரிவித்துள்ளது.

ஆயினும், இப்போதுள்ள நிலைமைகளின்படி கொழும்பில் உள்ளூராட்சித் தேர்தலில் தனித்தோ பிற தரப்புக்களுடன் சேர்ந்தோ தமிழரசுக் கட்சி போட்டியிடுவதற்கான வாய்ப்பு இல்லை என்றே தெரிகின்றது. பெரும்பாலும் கொழும்பில் போட்டியிடுவதில்லை என்ற முடிவையே நாளைய தமிழரசுக் கட்சியின் மத்திய குழு மேற்கொள்ளும் என்று கட்சி வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

---

## ஈஸ்டர் தாக்குதலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இந்த விடயங்களை ஜனாதிபதி உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்குத் தாம் வெளிப்படுத்தத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இலஞ்ச, ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பு நேற்று இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் ஜாமுனி காமந்த துஷார இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி மற்றும் அதனுடன் தொடர்புடைய பல தகவல்கள் தாம் அறிந்திருப்பதாக ஞானசார தேரர் தெரிவித்திருக்கின்றார். எவ்வாறாயினும் தற்போதைய அரசு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நியாயமான விசாரணைகளை முன்னெடுக்கும் என உறுதியளித்துள்ளது.

இந்நிலையில் தேரரின் இந்த அறிவிப்பு தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணை நடவடிக்கைகளுக்கு முக்கியமானதாக அமையும். அத்துடன் அவரது உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, அரசு அவருக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும்.

ஏற்கனவே அவர் இந்தத் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னரும் நாட்டில் அசம்பாவிதம் ஒன்று இடம்பெறவுள்ளது என்று எச்சரித்திருந்தார். தற்போது அவர் இந்த விசேட அறிவிப்பையும் வெளியிட்டுள்ளார். எதிர்வரும் நாட்களில் இடம்பெறவுள்ள தலதா கண்காட்சியின் போது உயர் பாதுகாப்பை வழங்குமாறு கூறியுள்ளார். நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அதேபோன்று தற்போது மக்களுக்குத் தேவையான சேவையை முன்னெடுத்துள்ள இந்த அரசை வீழ்த்துவதற்கான சூழ்ச்சி மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது. எனவே, இந்த அரசுக்கு எதிராக பயங்கரவாத அமைப்புகளின் அச்சுறுத்தல் காணப்படுமாயின் அது இந்த நாட்டில் மீண்டும் பாரிய நெருக்கடியை தோற்றுவிக்கும். அரசு இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட தேரரரை அழைத்து அவரிடம் வாக்குமூலம் பெற வேண்டும். அவரிடமிருந்து கிடைக்கப்பெறும் தகவல்களைக் கொண்டு உரிய நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும்."

– என்றார்.

---

## வடக்கில் உள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். காங்கேசன்துறையில் கைவிடப்பட்ட நிலையிலுள்ள சீமெந்து தொழிற்சாலையைக் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரர், நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்சன சூரியப்பெரும, நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ். சிறீபவானந்தராஜா, ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் உள்ளிட்ட குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர். அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பெரிய தொழிற்சாலைகளுக்கு முன்னால் நின்று பேச வேண்டிய நாங்கள் காடுகளுக்கு உள்ளே நின்று பேச வேண்டிய சூழ்நிலைக்கு இன்று தள்ளப்பட்டு இருக்கின்றோம். 1990 ஆம் ஆண்டுகளில் இவ்வாறான ஒரு தொழிற்சாலை இருந்ததா என்று பார்க்கின்றபோது ஆச்சரியமாக இருக்கின்றது. அவ்வாறான ஒரு மகிமையான தொழிற்சாலை இருந்த இடம் இன்று காடுகள் மண்டி கிடக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாகிய நாம் இந்த பிரதேசத்தை மாத்திரம் அல்ல நாட்டில் இருக்கின்ற அனைத்து தொழில்துறைகளையும் மேம்படுத்துகின்ற வேலையை முன்னெடுத்து வருகின்றோம்.

அந்த வேலையை முன்னெடுக்கும் போது வடக்கு மாகாணத்தில் கூடுதல் கவனத்தைச் செலுத்துகின்றோம். வடக்கில் உள்ள தொழிற்சாலைகள் அனைத்தையும் மீள இயக்கியே தீருவோம்."

அந்தவகையில் முதலாவது வேலைத்திட்டமாக தமிழர்களுடைய அபிமானத்தை மீளக் கட்டியெழுப்புகின்ற காங்கேசன்துறை தொழில்பேட்டையை நவீனமயமாக எவ்வாறு கையாள்வது எவ்வாறு மீளப் புனர்நிர்மானம் செய்வது என்பதை ஆராயவே மூன்று அமைச்சர்கள் கலந்து கொண்டு இந்த வேலைகளை ஆய்வு செய்துள்ளோம்.

அவ்வாறு ஆய்வு செய்கின்ற அரிய வாய்ப்பு அரிற சந்தர்ப்பம் எமக்கு கிடைத்திருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்திக் கொண்டு புதிய ஒரு உலகத்துக்கு செல்ல வேண்டிய தேவை எமக்குள்ளது. மீண்டும் மீண்டும்உலகத்தில்உள்ளதமிழ்மக்கள்அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம். இளைஞர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

இலங்கையில் வடக்கு மாகாணத்தை வேறொரு தரத்திற்கு உயர்த்தி வைப்பதற்கான செயற்பாடுகளை எங்களுடைய அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. அதற்காக கூடுதலான நிதி ஒதுக்கீடுகளையும் எங்களுடைய அரசாங்கம் செய்திருக்கின்றது.

நம்பிக்கை இழந்ததன் காரணமாக எங்களுடைய இளைஞர்கள் அனைவரும் நாட்டை விட்டு ஓடுகின்ற நிலைமையை நிறுத்த வேண்டும் என்றால் நாளைக்கு இந்த நாட்டில் வாழ வேண்டும் என்ற மனநிலை உருவாக வேண்டும் என்றால் நிச்சயமாக நாங்கள் கைத்தொழில் ரீதியாக முன்னேற்றம் அடைய வேண்டும். அதற்கான ஆய்வறிக்கையை சமர்ப்பிப்பதற்காகவும் அதற்கான வேலைத் திட்டங்களை உருவாக்குவதற்காகவும் விசேடமாக காங்கேசன்துறை, பரந்தன், ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, மாங்குளம் போன்ற பிரதேசங்களை முக்கோணத் திட்டத்தில் எதிர்வரும் காலத்தில் நவீன தொழில்நுட்ப வலயங்களாக மாற்றுகின்ற செயற்பாட்டை முன்னெடுப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகளை இன்று ஆரம்பித்துள்ளோம்." – என்றார்.




# மத்தள விமானநிலையத்தை விமானம் பழுதுபார்க்கும் மையமாக மாற்றக் கவனம்

மத்தள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை விமானம் பழுதுபார்க்கும் மையமாக மாற்றுவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற – வரவு செலவு திட்டம் மீதான குழுநிலை விவாதத்தின் போதுஅவர் இதனைத் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

“மத்தள விமான நிலையத்தை ஒரு பொருத்தமான நட்பு நாட்டுடன் இணைந்து இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றுவது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தி வருகிறது. மத்தள விமான நிலையம் சுமார் 36.5 பில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த விமான நிலையத்திற்காக 38.5 பில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

அதனால் இந்த நிறுவனத்தை இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கிறோம்.” – என்றார்.

## ஆசிரியை ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணியில் அமைந்துள்ள கிணற்றில் இருந்து மேற்படி ஆசிரியையின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

துர்நாற்றம் வீசுவதை அறிந்து அயலவர்கள் குறித்த கிணற்றை நேற்று காலை அவதானித்தனர். அந்தக் கிணற்றை அவர்கள் பரிசோதித்தபோது, கிணற்றில் பெண் ஒருவர் சடலமாகக் காணப்பட்டதை அடுத்து, இது தொடர்பில் பளை பொலிஸாருக்கு அறிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார், சடலத்தை மீட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண் அதே பகுதியை சேர்ந்த ஆசிரியையான 54 வயதுடைய தவராசசிங்கம் சரஸ்வதி என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.






## யாழில் வாள்வெட்டு! ஒருவர் படுகாயம்!!

### சந்தேகநபர் தலைமறைவு



யாழ். வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி நபர் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வாள்வெட்டை மேற்கொண்ட நபர் தலைமறைவாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மகளிர் தின பிரதிக்ஞை

இன்று சர்வதேச மகளிர் தினமாகும். பெண்களை போற்றும் விதமாகவும், பெண்களின் பிரதிநிதித்துவத்தை உணர்த்தும் விதமாகவும் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

தாயாக, மனைவியாக, மகளாக என ஒரு சமூகத்தில் நீக்கமற நிறைந்திருப்பது பெண்கள்தான். உலகின் உயிர்ப்பும் உயர்வும் அவர்களே. ஒரு நாடு முன்னேற வேண்டும் என்றாலும் சரி, ஒரு குடும்பத்தில் தலைமுறையே உயர வேண்டும் என்றாலும் அதற்கு பெண்களின் சமத்துவப் பங்களிப்பு அவசியமானது என்று மூத்தோர்கள் சொல்லி வைத்து இருக்கிறார்கள். ஆண்களுக்கு எந்த வகையிலும் பெண்கள் சளைத்தவர்கள் அல்லர் என்றாலும் கூட, இன்னும் கூட பெண்களுக்கான பாகுபாடு நீடிக்கத்தான் செய்கிறது. அந்தப் பாகுபாட்டை - புறமொதுக்கலை -களைவதை வற்புறுத்தவே இந்த சர்வதேச மகளிர் தின அனுஷ்டிப்பு அவசியமாகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் மகளிர் தினத்துக்கு ஐ.நா. மகளிர் அமைப்பு ஒரு கருப்பொருளை முன்மொழிகிறது.

அதன்படி 2025 ஆம் ஆண்டிற்கான - இந்த வருடத்துக்கான - கருப்பொருளாக 'செயலை துரிதப்படுத்து' ('Accelerate Action') என்பது முன்மொழியப்பட்டுள்ளது. இது பாலின சமத்துவத்திற்கான அவசரத் தேவையை வலியுறுத்துகிறது.

உலகப் பொருளாதார மன்றத்தின் தரவுகளின்படி, தற்போதைய வேகத்தில், முன்நகர்ந்தால், 2158 வரை முழு பாலின சமத்துவத்தை அடைய முடியாது. இது, முன்னேற்றத்தைக் கணிசமாக விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது. இந்த ஆண்டுக்கான கருப் பொருளின் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கின்றது.

சர்வதேச மகளிர் தினம் என்பது வழக்கமான ஒரு கொண்டாட்டத்திற்கு அப்பாற்பட்டு பாலின ஏற்றத் தாழ்வுகளைச் சரி செய்வதற்கான ஒரு தினமாகப் பார்க்கப்படுகிறது. இது பெண் அதிகாரத்திற்கான உலகளாவிய ஒற்றுமையை வளர்க்கும் அதே வேளையில், பெண்களுக்கு இருக்கும் பொருளாதார சமத்துவமின்மை, அரசியல் பிரதிநிதித்துவமின்மை மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையை வெளிப்படுத்தி எடுத்துக்காட்டுவதாகவும் உள்ளது.

பெண்களின் உரிமைகளை வடிவமைக்கும் சட்டங்கள் மற்றும் சமூக மாற்றங்களைக்கொணர்வதில்உலகம் உறுதியுடன் செயல்படவேண்டும் என்பதை இந்த நாள் நமக்குத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஊதா, பச்சை, வெள்ளை ஆகியவை சர்வதேச மகளிர் தின நிறங்கள் என்று சர்வதேச மகளிர் தின இணையதளம் தெரிவித்துள்ளது.

"ஊதா நீதி மற்றும் கண்ணியத்தை குறிக்கிறது. பச்சை நம்பிக்கையைக் குறிக்கிறது. வெள்ளை தூய்மையை பிரதிபலிக்கிறது." - என்று அதற்கு அர்த்தம் கூறப்படுகின்றது.

ஆம், மனிதத்துவம் தன்னில் பாதியை சமத்துவம், நீதி, கண்ணியம், நம்பிக்கையோடு உவந்து மதித்துப் போற்றிப் பேண வேண்டும் என்பதை சர்வதேச மகளிர் தினம் வலியுறுத்துவதால் அதற்கு இந்நிறங்களின் குறியீடு பொருத்தமானதே.

ஆண்களுக்கு நிகராகப் பணியாற்றினாலும் உரிமையிலும், ஊதியத்திலும் தொடர்ந்து மகளிருக்கு அநீதி இழைக்கப்பட்டே வருகின்றது.

பெண்களின் உரிமைகள் பொறுத்த வரையில் இதுவரை கண்ட சாதனைகளை மதிப்பிடுவதற்கும், தடைகளை எதிர்கொள்வதற்கும், அர்த்தமுள்ள சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்கும் ஒரு முக்கிய தருணமாக இந்நாள் உள்ளது.

இன்று அனுஷ்டிக்கப்படும் சர்வதேச பெண்கள் தினம், ஒரு நூற்றாண்டு காலம் உரிமைகளுக்காக - சமத்துவத்துக்காக - நீதி, நியாயத்துக்காக-மகளிர்முன்னெடுத்தஇடையறாப் போராட்டங்களின் மீதே கட்டமைக்கப் பட்டிருக்கிறது.

அந்த சமத்துவத்தை எங்களில் பாதியினருக்கு நாம் உறுதிப்படுத்த இந்த சர்வதேச மகளிர் தினத்தில் பிரதிக்ஞை செய்வோம்.



# பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவுக்கு 55 லட்சம் வெளிநாட்டினர் வருகை

உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் நகரில் ஜனவரி 13 ஆம் திகதி தொடங்கி 45 நாள்கள் நடைபெற்ற மகா கும்பமேளாவில் பக்தர்கள் தங்குவதற்கு கூடார நகரம் அமைக்கப்பட்டது. இதில் நட்சத்திர விடுதிகளின் வசதிகளை உத்தர பிரதேச அரசு செய்திருந்தது. மாநில சுற்றுலா கழகத்தின் திரிவேணி சங்கம கரை காலனியில் 2,100 கூடாரங்கள், 110 தனிக்குடில்கள் கட்டப்பட்டிருந்தன. இவற்றில் தங்குவதற்கு இந்தியர்கள் மற்றும் வெளிநாட்டினர் இணையதளத்தில் முன்பதிவு செய்தனர்.

சர்வதேச தரத்தில் நவீன வசதிகளுடன் கூடாரங்களின் அறைகள், குடில்கள் இருந்ததால், லட்சக்கணக்கான வெளிநாட்டினரும் இங்கு வந்து தங்கினர். இந்நிலையில், தங்கும் கூடாரங்கள், உணவு விடுதிகள் என மாநில சுற்றுலா கழகத்துக்கு மட்டும் சுமார் 100 கோடி ரூபா வருவாய் கிடைத்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. மேலும் மகா கும்பமேளா நடைபெற்ற 45 நாள்களில் தனியார் கூடாரங்களுக்கும் 73 கோடி ரூபா வருவாய் கிடைத்துள்ளது. இந்த தொகை இறுதி கணக்கீட்டுக்கு பிறகு மேலும் உயரும் என்று தெரிகிறது.

இதுபோன்ற நடவடிக்கைகளால் முதல் முறையாக, பிரயாக்ராஜ் நகர் சர்வதேச சுற்றுலா வரைபடத்தில் இடம் பெற்றுள்ளது. மேலும் மகா கும்பமேளாவால் உலக சுற்றுலா நிகழ்ச்சிகளின் அனைத்து சாதனைகளும் முறியடிக்கப்பட்டுள்ளது. சுமார் 55 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மகா கும்பமேளாவுக்கு வந்துள்ளனர்.

கடந்த 144 ஆண்டுகளுக்கு பிறகு நடைபெறும் மகா கும்பமேளா என்பதால், பல வழிகளில் வரலாறு படைத்துள்ளது. இங்கு 73 நாடுகளின் தூதர்கள், 116 நாடுகளின் பக்தர்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராட வந்தனர். நேபாளம், அமெரிக்கா, பிரிட்டன், இலங்கை, கனடா, பிங்களாதேஷ், ரஷ்யா, ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், பிரேசில், மலேசியா, நியூசிலாந்து, இத்தாலி, தாய்லாந்து உள்ளிட்ட 100 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

# மும்பை தாக்குதல் குற்றவாளியை நாடு கடத்துவதை தடுக்கும் மனு அமெரிக்க உயர் நீதிமன்றால் நிராகரிப்பு



மும்பை பயங்கரவாதத் தாக்குதல் குற்றவாளி தஹாவூர் ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்துவதைத் தடை செய்யக் கோரிய விண்ணப்பத்தை அமெரிக்க உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

26/11 மும்பை பயங்கரவாதத் தாக்குதலில் தொடர்புடைய தஹாவூர் ராணா, பாகிஸ்தானிய வம்சாவளியைச் சேர்ந்த முஸ்லிம் என்பதால் அங்கு சித்திரவதை செய்யப்படுவார் என்று கூறி, இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவதை எதிர்த்து இந்த வாரம் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும், அமெரிக்க உயர் நீதிமன்ற நீதிபதி எலினா ககன், ராணாவை நாடு கடத்துவதற்கு தடை விதிக்க மறுத்ததுடன், அந்த விண்ணப்பத்தை நிராகரித்தார்.

பாகிஸ்தானிய வம்சாவளியைச் சேர்ந்த கனேடிய நாட்டவரான 63 வயதான ராணா, தற்போது லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள ஒரு பெருநகர தடுப்பு மையத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவர் லஷ்கர்-இ-தொய்பா (டுநவு) பயங்கரவாதி டேவிட் ஹெட்லியுடன் தொடர்புடையவர் என்று அறியப்படுகிறது.

இவர் 2008 ஆம் ஆண்டு மும்பையில் நடந்த தாக்குதல்களில் 175 பேர் கொல்லப்பட்டதற்கு முக்கிய சதிகாரர்களில் ஒருவராக இருந்தார்.

பெப்ரவரியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்க பயணத்தின் போது, இந்தியாவில் நீதியை எதிர்கொள்ள ராணாவை நாடு கடத்துவதற்கு தனது நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளதாக ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.

ஜனவரி மாதம் அமெரிக்க உயர் நீதிமன்றம் ராணாவின் மறுஆய்வு மனுவை தள்ளுபடி செய்த தீர்ப்பைத் தொடர்ந்து ட்ரம்பின் முடிவு, அவரை நாடு கடத்துவதற்கான வழியைத் தெளிவுபடுத்தியது.

2011 ஆம் ஆண்டில், மும்பையின் முக்கிய இடங்களில் நான்கு நாள்கள் நீடித்த தொடர்ச்சியான ஒருங்கிணைந்த பயங்கரவாதத் தாக்குதல்களைத் திட்டமிட்டு செயல்படுத்தியதற்காக ராணா மற்றும் எட்டு பேர் மீது தேசிய புலனாய்வு நிறுவனம் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது.

அமெரிக்க ஜனாதிபதி நாடு கடத்தல் ஒப்புதலை அறிவித்த ஒரு நாளுக்குப் பின்னர், மகாராஷ்டிரா முதலமைச்சர் தேவேந்திர ஃபட்னாவிஸ், மும்பையின் பாதுகாப்பு உள்கட்டமைப்பு ராணா உட்பட உயர்மட்ட குற்றவாளிகளைக் கையாளும் திறன் கொண்டது என்று வலியுறுத்தினார்.



# பஷார் அல் அசாத் வீழ்ச்சிக்குப் பின்னர் சிரியாவில் வன்முறை: ஊரடங்கு அமுல்

சிரியாவின் புதிய ஆட்சியாளர்களுடன் தொடர்பு கொண்ட படைத்தரப்பினருக்கும், பதவியிலிருந்து அகற்றப் பட்ட ஜனாதிபதி பஷார் அல் – அசாத்தின் விசுவாசமான ஆயுததாரிகளுக்கும் இடையே போர் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் ஆயுததாரிகள் பஷார் அல் – அசாத்தை வீழ்த்தி இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபித்ததுடன், அது சிரியாவில் நடந்த மோசமான தாக் குதல் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மேற்கொள்ளப்படும் தாக்குதல் சம்பவங்க ளில் 70 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர் என பிரித்தானியாவை தளமாகக் கொண்டுள்ள சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிவித்துள்ளது.

இது தவிரப் பெருந்தொகையானவர்கள் காயமடைந் துள்ளனர்.

மோசமாகச் சண்டை வெடித்த லற்றக்கியா மற்றும் ராற்றோர்ஸ் துறைமுக நகரங்களில் ஊரடங்கு சட்டம் பிரகட னப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் மோதல்களில் கொல்லப்பட்டவர்களின், எண் ணிக்கை வேறுபடுவதாக அங்கு நிலைகொண்டுள்ள செய்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், சிரியாவின் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் பஷார் அல் – அசாத்துக்கு ஆதரவாகப் போராடும் விசுவாசிகள் தாக்குதலிலிருந்து ஒதுங்கியிருக்கும்படி கோரப்பட்டுள்ளது.


சிரியாவின் இடைக்கால நிர்வாகம், முன்னாள் ஜனாதி பதியின் காலத்தில் தயாரிக்கப்பட்ட குறிப்பாக ரசாயன ஆயுதங் கள் அனைத்தும் அழிக்கப்படும் என உறுதியளித்துள் ளது.

எனினும் சிரியாவில் கடந்த 14 ஆண்டுகளாக இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போரின் போது பஷார் அல் – அசாத்தின் அரசாங்கம் ஒரு போதும் இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்யவோ அல்லது அதனைப் பிரயோகிக்கவோ இல்லை எனத் தெரிவித்துள்ளது.












# சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 13 பொலிஸார் உயிரிழப்பு

சிரியாவில் கிளர்ச்சியாளர்களால் நடத்தப்பட்ட தாக்குதலில் 13 பொலிஸார் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சிரியாவின் கடற்கரை நகரமான லடாகியா மாகாணம் அல்வாடி பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சிரியாவில் அல் அசாத் தலைமையிலான அரசு கடந்த டிசம்பர் மாதம் கவிழ்ந்ததையடுத்து, சிரியாவின் புதிய ஜனாதிபதியாக ஹயத் தஹிர் அல் ஷியாம் பதவியேற்றார்.

அதேவேளை, அல் அசாத் ஆதரவாளர்கள் குழுக்களாக சேர்ந்து சிரியா அரசுக்கு எதிராக கிளர்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், சிரியா அரசுப்படைகள் மீதும் இந்த கிளர்ச்சிக் குழுக்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

அல் அசாத் ஆதரவு கிளர்ச்சியாளர்களே இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர் என்பதை பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்கா – உக்ரைன் மீண்டும் பேச்சுக்கு தயார்



அமெரிக்காவிற்கும் உக்ரைனுக்கும் இடையில் நடைபெற இருக்கும் பேச்சுவார்த்தை அர்த்தமுள்ள சந்திப்பாக இருக்கும் என உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் – ரஷ்யா போர் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புடன் அடுத்த வாரம் சவூதி அரேபியாவில் நடைபெற உள்ள பேச்சுவார்த்தை அர்த்தமுள்ளதாக இருக்கும் எனத் தான் நம்புவதாக வொளாடிமிர் ஜெலன்ஸ்கி ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதிக்கும் அமெரிக்க ஜனாதிபதிக்கும் இடையில் கடந்த சில நாள்களுக்கு முன் நடைபெற்ற சந்திப்பு வாக்கு வாதத்தில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.



# தேசிய ஆசிரியர் இடமாற்ற கொள்கைகளை விரைவாக மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை

தேசிய ஆசிரியர் இடமாற்ற கொள்கைகளை விரைவாக மறுசீரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி, உயர்க் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது

தற்போதுள்ள ஆசிரியர் இடமாற்ற கொள்கைகளுக்கு அமைய, மாகாண பாடசாலைகளிலிருந்து தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுக்கொள்ள 21 கடிதங்களை பரிமாற்றம் செய்ய வேண்டிய நிலை காணப்படுவதாக பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள வழிமுறைக்கமைய, சில மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வாக தேசிய பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது சிக்கலாக மாறிவிட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, ஆசிரியர் இடமாற்ற கொள்கைகளை உடனடியாக மறுசீரமைப்பதற்கான சில கலந்துரையாடல்கள் நிறைவடைந்துள்ளன.

10 வருடங்களாக ஒரே பாடசாலையில் சேவை புரியும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கான செயல்முறையும் இதனூடாக மாற்றம் செய்யப்படும் எனவும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களுக்கு தங்களுடைய வீடுகளிலிருந்து அருகில் உள்ள பாடசாலைகளுக்கு செல்லக்கூடிய வகையில் புதிய ஆசிரியர் இடமாற்ற முறைமை உருவாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து ஆசிரியர்களும் பணிபுரியும் இடம் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்படும் என பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# துப்பாக்கிகள், கைக்குண்டுகள் தொடர்பில் தகவல் வழங்குவோருக்கு அதிக வெகுமதி




சட்டவிரோதமான முறையில் துப்பாக்கிகளை தம்வசம் வைத்திருப்பவர்கள் தொடர்பில் தகவல்களை வழங்குபவர்களுக்கான வெகுமதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ரீ - 56 ரக துப்பாக்கியை தம்வசம் வைத்திருக்கும் சந்தேக நபரை கைது செய்யும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு 10 லட்சம் ரூபாவும், தகவல் வழங்குபவர்களுக்கு 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

சந்தேகநபரின்றி துப்பாக்கி மாத்திரம் மீட்கப்பட்டால் பொலிஸாருக்கு 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், தகவல் வழங்கும் நபருக்கு 5 லட்சம் ரூபாவும் வழங்கப்படும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பிஸ்டோல் ஒன்றுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டால் பொலிஸாருக்கு 4 லட்சம் ரூபாவும், தகவல் வழங்குனருக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

கைக்குண்டுடன் சந்தேகநபர் ஒருவர் கைதானால் பொலிஸாருக்கு 50 ஆயிரம் ரூபாவும், தகவல் வழங்குனருக்கு 30 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.




# வடக்கின் பெரும் போரில் பரியோவான் கல்லூரி ஆதிக்கம்

118ஆவது வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

வடக்கின் பெரும் போர் என அழைக் கப்படும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான 118ஆவது வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டச் சமர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

தொடர்ச்சியாக 3 நாட்கள் இரண்டு இன்னிங்ஸ்களாக இடம்பெறும் இப் போட்டியில் அஷ்னாத் தலைமையி லான யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியும் நியுட்டன் தலைமையி லான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யும் களமிறங்கின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. அதன் பிரகாரம் முதலில் துடுப்படுத் தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 57.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டு களையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் மத் திய கல்லூரி சார்பில் அபிஷேக் 27 ஓட்டங்களையும், சிமில்டன் மற்றும் நியூட்டன் 24 ஓட்டங்களை அதிக பட்சமாக பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி சார்பில் அணித் தலைவர் அஷ்னாத் 5 விக்கெட்டுகளையும், மாது லன், ரண்டியோ ஆகியோர் தலா 2 விக் கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு தனது முதலாம் இன்னிங் ஸில் துடுப்பாடிய யாழ்ப்பாணம் பரி யோவான் கல்லூரி 66 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 181 ஓட்டங்களை பெற்று 50 ஓட்டங்கள் முன்னிலை வகித்தது. துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி சார்பில் அனுஷாந் 86 ஓட்டங்களையும், அஷ்னாத் 29 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பில் அணித் தலைவர் நியூட்டன் 5 விக்கெட்டுகளையும், முரளி திசோன் 2 விக்கெடுகளையும் கைப்பற்றினர்.

50 ஓட்டங்கள் பின்னிலையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தனது இரண்டாம் இன்னிங்ஸ்க்காக துடுப் பெடுத்தாடி 54 ஓவர்களில் 8 விக்கெட்டு களை இழந்து 135 ஓட்டங்களை பெற்றபோது இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவிற்கு வந்தது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் மத் திய கல்லூரி சார்பில் சிமில்டன் 34 ஓட்டங்களையும் அபிலாஷ் 28 ஓட் டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி சார்பில் அஷ்னாத் 3 விக்கெட்டுகளையும் மாதுலன் 2 விக் கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 85 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. இன்று மூன்றாம் நாள் ஆட்டம் இடம்பெறவுள்ளது. இரண்டு விக்கெட்டு கள் மாத்திரமே கைவசம் உள்ளது.

இதன்படி இப்போட்டியில் யாழ்ப்பா ணம் பரியோவான் கல்லூரி ஆதிக்கம் செலுத்திவருகின்றது.




# தமிழ் இலக்கியத்தில் பெண்கள் போற்றப்பட்டனரா?

## இன்று சர்வதேச மகளிர் தினம்

உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகிறது இந்த மகளிர் தினம். "அனைத்து பெண்கள், பெண் பிள்ளைகளுக்காக உரிமை சமத்துவம் வலுப்படுத்தல்" என்னும் தொனிப் பொருளில் கொண்டாடப்படுகிறது.

தமிழ் இலக்கியத்தில் பெண்கள் போற்றப்பட்டனரா? தாழ்த்தப்பட்டனரா? என்பதை இவ்வருட மகளிர் தினத்தில் ஆராய்வோம்.

தமிழ் மொழி எப்போதுமே பெண்களை கொண்டாடுவது கண்கூடு. அதேவேளை வடமொழிகள் பெண்களை அடிமைத் தனமாக்குவதை பொதுவாகக் காணலாம்.

உலகம் முழுவதுமே பெண்களைக் காலுக்கு கீழே வைத்திருந்த காலகட்டத்தில் பெண்களை மேன்மை மிகு பொக்கிஷமாக போற்றிப் புகழ்ந்தது தமிழ்ச் சமூகம். இது வெள்ளிடைமலை.

ஓர் ஆண் என்ன செய்தாலும் அவனுக்கு சேவகம் செய்வ தொன்றே பெண்ணின் பணி என்பதைச் சொன்னது வடமொழி இலக்கியம்.

ஆனால் அவன் ஆணோ, கணவனோ, அரசனோ, ஆண்டவனோ அநீதி என்றால், அறம் தவறினால் அடங்காதே, அவனை எதிர்த்து போராடு என்பதை போதிப்பது தமிழ் இலக்கியங்கள்.

சங்ககாலத்திலேயே, 47 பெண் எழுத்தாளர்களைக் கொண்டது உலகிலேயே தமிழ் சமூகம் மட்டும்தான். உலக மொழிகளின் தாய் என்று கூறிக் கொள்ளும் கிரேக்கத்தில் கூட 7 பெண்கள் தான் இருந்தார்கள் என்பது வரலாறு.

தேவபாஷை என்று கூறிக் கொள்ளும் சமஸ்கிருதத்தில் ஒரு பெண் எழுத்தாளர் கூட கிடையாது. ஏன்? சமஸ்கிருதத்தை வாசிக்கவோ, பேசவோ கூட பெண்களுக்கு உரிமை கிடையாது. ஆனால் கீழடி போன்ற இடங்களில் இருந்து கிடைத்ததில் தங்கத்திலும், பானை ஓடுகளிலும் பெண்களின் பெயரைப் பொறித்து புழங்குமளவுக்குத் தமிழ் சமூகம் நாகரீகம் கொண்டது. ஆண்டாண்டுகாலமாக பெண்களை போற்றிப் புகழ்ந்து கொண்டாடியது நம் தமிழ் சமூகம் என்றால் மிகையாகாது.

தமிழ், தமிழ் சமுதாயம் இன்றும் நிலைத்து இருப்பதற்கு காரணம் பெண்களைக் கொண்டாடியதால் தான். பெண்கள் உலகத்தின் ஆணிவேர்கள். அவர்களைக் கொண்டாடுவோம்.

### தமிழ் இலக்கியத்தில் பெண்கள்!

இராமன் தன் மனைவியை சந்தேகித்து தீயில் இறங்கப் பணிக்கிறான். தீயில் இறங்கி தான் பத்தினி என்பதை நிரூபிக்கிறாள். அதற்கு பிறகு கூட ஊராரின் சந்தேகத்தை காரணங்காட்டி கர்ப்பிணியான தன் மனைவியை வனத்தில் தள்ளுகிறார் இராமன்.

அங்கேயே குழந்தைகள் பெற்று வனத்திலேயே வாழ்கிறாள், இரண்டு குழந்தைகள் வளர்ந்து ஊர் திரும்பியதும் மடிகிறாள். – இது ராமாயணம்.

ஓர் அழகிய இளம் மங்கை. அவளுக்கு முதிர்ந்த கணவன். மனமுவந்து வாழ்கிறாள். ஒரு கட்டத்தில் கணவன் குஷ்டரோகியாகிறான். அதன் பிறகும் அவளுக்கு வெறுப்பு ஏற்படவில்லை. பண்ணாத குசும்பெல்லாம் அந்தக் கிழடு செய்தும் அவனை ஆராதிக்கிறாள். ஒரு கட்டத்தில் ஒரு தாசியை பார்த்து நான் இவளோடு கூட வேண்டுமென்கிறான். அதற்கும் அவள் இசைகிறாள். தாசிக்கு கூலியாக தாசியின் வீட்டை துப்புரவு செய்வது உள்ளிட்ட பணிகளைச் செய்கிறாள். தன் கணவனை தோளில் தூக்கிச் சென்று தாசியின் வீட்டுக்குச் செல்கிறாள். – இது நளாயினி கதை.

இவை அனைத்தும் வடமொழி இலக்கியங்கள் ஆகும்.

மாறாக தமிழ் மொழி இலக்கியங்கள் என்ன கூறின என்பது பற்றி பார்ப்போம்.

தன் கணவனைச் செய்யாத குற்றத்துக்காகக் கொலை செய்து விட்டான் பாண்டிய மன்னன். தன் கோபத் தீயால் ஒரு நகரத்தையே எரிக்கிறாள் கண்ணகி. தன் உள்ளத்து எரிச்சல் பற்றி எரிகிறது என கெக்கலிட்டு சிரிக்கிறாள். மதுரையை ஆவேசமாக எரித்த படியே வேகமாக நடந்து சென்று சற்று நிதானித்து திரும்பி பார்க்கிறாள், 'அனைத்தும் எரிந்து விட்டனவா? அல்லது இன்னும் மிச்சமிருக்கிறதா' என்று. – இது சிலப்பதிகாரம்.

அவள் ஓர் பேரழகி. அவள் அழகில் கவரப்பட்டு ஓர் இளவரசன் தன் காதலை அவளிடம் கூறு

தொடர்ச்சி▼

# தமிழ் இலக்கியத்தில் பெண்கள் போற்றப்பட்டனரா?

தொடர்ச்சி▲

கிறான். அவள் வலக்கையில் வாங்கி இடக்கையில் தூர வீசி விட்டு சலனமற்று நடக்கிறாள். இளவரசனும் ஆசிட் வீச வில்லை, ஆபாச படமெடுத்து மிரட்ட வில்லை. அவள் உணர்வுக்கு மதிப்பளித்து சென்று விடுகிறான். – இது மணிமேகலை.

அவள் கணவன் அவளை கொல்வதற்காக திட்டமிட்டு மலை உச்சிக்கு அழைத்துச் செல்கிறான். அவளும் விவரமறியாது கூடவே செல்கிறாள். மலை உச்சியை எட்டியதும்தான் தெரிகிறது. 'இவன் தன்னை கொலை செய்ய அழைத்து வந்திருக்கிறான்' என்று. யோசிக்கிறாள். இறுதியாக கணவனிடம் பேசுகிறாள், "நீ என்னை கொல்லத்தானே அழைத்து வந்திருக்கிறாய்? நான் மடிவது பற்றி எந்த கவலையுமில்லை. ஒரே ஒரு வேண்டுகோள்தான். என் கணவர் நீங்கள்.உங்களை மூன்று முறை சுற்றி வந்து காலில் விழுந்து ஆசி வாங்கினால் மோட்சம் செல்லும் பாக்யம் கிட்டும் எனக்கு" என்று சொல்கிறாள். "அட அதனாலென்ன? தாராளமாக சுற்றி வா" என்று கணவனும் சொல்ல, சுற்றுகிறாள். முதல் சுற்று, இரண்டாம் சுற்று, மூன்றாம் சுற்றில் தன் கணவனை மலையிலிருந்து கீழே தள்ளி விட்டு கொல்கிறாள்.– இது குண்டலகேசி.



இவை அனைத்தும் தமிழ் இலக்கியங்கள்.

எனவே பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து போற்றியது தமிழ் இலக்கியமே எனலாம்.

**வித்தகர் விபுலமாமணி**
**வி.ரி.சகாதேவராஜா,**
**காரைதீவு நிருபர்.**

# யாழ் மாவட்டத்துக்கு வந்து சேர்ந்த மொத்த நிதியில் 2019 இலேயே அதிகம் திரும்பி அனுப்பப்பட்டதாம்!

## ஒரு கோடி 18 லட்சம் ரூபா அந்த ஆண்டில் திரும்பியதாம்




**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு மத்திய அரசிடம் இருந்து கிடைத்த நிதியில் 2019 ஆம் ஆண்டே அதிகபட்சமாக ஒரு கோடியே 17 லட்சத்து 87 ஆயிரம் ரூபா நிதி திரும்பியுள்ளதாக யாழ் மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கிற்கு வரும் நிதியை மக்கள் பயன்பாட்டிற்கு செலவு செய்யத் தெரியாமல் மீண்டும் மத்திய அரசிற்கே திருப்பி அனுப்புகின்றார்கள் எனக் கொழும்பில் அமைச்சர்கள் முதல் ஜனாதிபதி வரையில் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பில் 2009 ஆம் ஆண்டிற்குப் பின்பு வடக்கிற்கு ஒதுக்கிய நிதியில் திருப்பி விடப்பட்ட நிதியின் பெறுமதியை சம்ப்பிக்குமாறு நாடாளுமன்றச் செயலாளர் எழுத்தில் கோரியிருந்தார்.

நாடாளுமன்றச் செயலாளரின் எழுத்து மூல கோரிக்கைக்குப் பதிலளிக்கும்போதே யாழ் அரச அதிபர் மேற்படி விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

2009 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான 16 ஆண்டுகளில் 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் தலா 40 லட்சம் ரூபா திரும்பியுள்ளது. 2022 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் 3 லட்சத்தை தாண்டிய நிதியே திரும்பியுள்ளது. 9 ஆண்டுகள் ஒரு லட்சத்திற்கும் உட்பட்ட தொகையே திரும்பிய போதும் 2019 ஆம் ஆண்டில் மட்டுமே ஒரு கோடியே 17 லட்சத்து 87 ஆயிரத்து 672 ரூபா பணம் திரும்பியுள்ளதாக விவரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



# தேர்தலில் குறைந்த பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் குழுக்களின் ஈடுபாடு தொடர்பில் வவுனியாவில் கலந்தாய்வு!

(கி.வசந்தன்)

தேர்தல் செயன்முறையில் பெண்கள், இளையோர் மற்றும் குறைந்தளவு பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் குழுக்களின் ஈடுபாடு மற்றும் தேர்தல் தொடர்பான தகவல்களின் தாக்கம் பற்றி தேர்தல் பங்குதாரர்களுடனான வவுனியா மாவட்ட மட்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் ஏற்பாட்டில் வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சிருந்தினர் விடுதியில் இந் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

அரசியல் பன்மைத்துவம், தேர்தல் செயன்முறைகளில் பிரஜைகளின் அல்லது குடிமக்களின் ஈடுபாடு மற்றும் தகவல்களின் தாக்கம் தொடர்பில் இதில் கலந்துரையாடப்பட்டது.

மாற்று கொள்கைகளுக்கான நிலையம் (சீ.பி.ஏ.) மற்றும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (சீ.எம்.ஈ.வீ.)ஆகிய அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் விவரங்கள், பரிந்துரைகள் என்பனவும் இதன்போது பரிமாறப்பட்டன.

தேசிய ஒருங்கிணைப்பாளர் ஏ.எம். என். விக்டர் மற்றும் வட மாகாண ஒருங்கிணைப்பாளர் சிவகுமார் அனோஜனின் பங்குபற்றுதலுடன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திவியா தர்மராசாவின் ஒழுங்கமைப்பின் கீழ் இந் நிகழ்வு நடைபெற்றது.

இதில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தேர்தல் கண்காணிப்பாளர்கள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சியில் மக்கள் பயன்பாட்டிற்கான 1,199 ஏக்கர் நிலம் படையின் கட்டுப்பாட்டில்

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் தற்போதும் படையினர் வசம் 1198.82 ஏக்கர் நிலம் உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் படையினர் வசம் அரச மற்றும் தனியாரின் 1198.82 ஏக்கர் நிலந்தான் படையினர் வசம் உள்ளதாக மாவட்ட அரச அதிபரினால் நாடாளுமன்றச் செயலாளரிற்கு எழுத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மாவட்டத்தில் இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் என்பன பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக் வைத்திருக்கும் நிலங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் உச்ச பட்சமாக கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவினில் 653.65 ஏக்கர் நிலம் படையினர் வசம் உள்ளது. கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 180.38 ஏக்கர் நிலமும், பச்சிளைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவினில் 116.61 ஏக்கர் நிலமும், பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் 248.18 ஏக்கர் நிலமும் படையினரிடம் உள்ளன.




இவ்வாறுள்ள காணிகளில் தனியாருக்குச் சொந்தமான அதிக நிலங்கள், பாடசாலை, தொழில் நுட்பக் கல்லூரியின் நிலங்கள், பிரதேச சபை, விவசாயத் திணைக்களத்திற்கு உரிய காணிகளும் காணப்படுகின்றன.

இதேநேரம் ஓர் வைத்தியசாலை மற்றும் ஓர் ஆலயத்தின் காணிகளும் இன்றுவரை படையினர் வசமே உள்ளன எனவும் அந்த விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கரைச்சியில் 305 ஏக்கர் காணி தனியார் மற்றும் திணைக்கள காணியிலும், 259 ஏக்கர் அரச காணியும் 91 ஏக்கர் நிலம் எவருக்குச் சொந்தமானது என உறுதி செய்யாத நிலையிலும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கண்டாவளையில் 22 ஏக்கர் தனியார் காணிகள் தவிர்ந்த 158 ஏக்கர் நிலங்கள் அரச காணி எனவும், பச்சிலைப்பள்ளியில் 68 ஏக்கர் அரச காணியும் எஞ்சிய 48 ஏக்கர் தனியார் காணிகள் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

இதேபோன்று பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவிலே 169 ஏக்கர் அரச காணயிலும் 79 ஏக்கர் தனியார் காணியிலும் படையினர் உள்ளனர்.

இதற்கமைய மாவட்டத்தில் 455 ஏக்கர் தனியார் மற்றும் திணைக்கள நிலத்திலும் , அடையாளம் காணப்படாத 100 ஏக்கரிலும், 643 ஏக்கர் அரச நிலத்திலும் படையினர் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவை அனைத்திற்கும் அப்பால் ஏற்கனவே படையினருக்கு என நிரந்தரமாக வழங்கப்பட்ட இடங்கள் இப் பட்டியலில் இணைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு



(கி.வசந்தன்)

வவுனியா - பண்டாரிக்குளம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீடகப்பட்டுள்ளார்.

வவுனியா, பண்டாரிக்குளம், 3 ஆம் ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் இருந்தே குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் உள்ள அவரது மனைவி ஆசிரியராக பணி புரிவதால் பாடசாலைக்கு சென்ற நிலையில், அந்த நபர் மட்டும் வீட்டில் நின்றுள்ளார். பாடசாலை முடிந்து மனைவி வந்து பிற்பகல் 1.45 மணியளவில் வீட்டில் உள்ள கணவரை அழைத்த போதும் நீண்ட நேரமாக வீட்டு வாயில் திறக்கப்படவில்லை.

இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் மதிலால் ஏறி சென்று கதவை திறந்த போது கணவன் அறை ஒன்றில் இறந்த நிலையில் காணப்பட்டார். அவர் தலையில் காயமும் காணப்பட்டது.

இந்நிலையில், உறவினர்கள் பிற்பகல் 1.55 மணியளவில் பண்டாரிக்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய போதும், அவர்கள் மரண விடயத்தை தாங்கள் கையாள்வதில்லை வவுனியா பொலிஸில் தெரிவிக்குமாறு கூறியுள்ளனர். அதன்பின் பிற்பகல் 2 மணியளவில வவுனியா பொலிஸாருக்கு நேரில் சென்று தகவல் வழங்கப்பட்டது.

நீண்ட நேரமாக சம்பவ இடத்தில் கிராம அலுவலர் உள்ளிட்ட பொதுமக்கள் திரண்டிருந்த போதும், பொலிஸார் வரவில்லை. அதன் பின் பிற்பகல் 4 மணியளவில் வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் இயங்கும் அவசர தொலைலைபேசி இலக்கமான 107 தகவல் வழங்கப்பட்டது. அதன் பின் 4.30 மணியளவில் வவுனியா பொலிஸார் வருகை தந்தனர். பண்டாரிக்குளம் பொலிஸார் மாலை 5 மணிக்கு வருகை தந்து விசாரணைகளை நடத்தினர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி டா.சுரேந்திரசேகரன் சம்பவ இடத்திற்கு சடலத்தை பார்வையிட்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார். பிற்கபல் 1.50 மணியளவில் இறந்த நிலையில் சடலம் காணப்பட்ட போதும், பொலிஸார் தாமதமாக வந்தமையால் மாலை 5 மணிக்கே சடலம் அங்கிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு உடற் கூற்று பரிசோதனைகக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வீட்டில் உள்ள கட்டிலின் மேல் ஏறி அறை ஒன்றின் சுவருக்கு வர்ணம் பூசிய போது கட்டிலில் இருந்து தவறி விழுந்து அவர் இறந்திருககலாம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நில அளவைத் திணைக்களத்தில் பணி புரிந்து கடந்த மாதம் ஓய்வு பெற்ற சி.மகேந்திரராஜா (வயது 60) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே மரணமடைந்தவாராவார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் இரவு நேரக் களியாட்ட நிகழ்வுகளில் அதிகம் ஒலி எழுப்பப்படுவதை மட்டுப்படுத்துங்கள்!

## பிரதி பொலிஸ் மா அதிபர் உத்தரவு

(கி.வசந்தன்)

வவுனியாவில் தற்போது இடம்பெற்று வரும் களியாட்ட நிகழ்வுகளின் போது பரீட்சை எழுதும் மாணவர்களின் நலன் கருதி அதிக ஒலி எழுப்புவதை மட்டுப்படுத்துமாறு வன்னி பிரதி பொலிஸ் மா அதிபர் சாமந்த விஜேசேகரவினால் நேற்றுக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சை நெருக்கும் நிலையில் வவுனியாவில் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் அதிக ஒலியுடன் களியாட்ட நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன எனவும், அது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் பொது மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை வவுனியா ஊடகவியலாளர்கள் வன்னி பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருந்தனர்.

இதனையடுத்து இரவு நேர களியாட்ட நிகழ்வுகளின் போது அதிக ஒலி எழுப்புவதை உடனடியாக நிறுத்துமாறும், நிகழ்வு நடைபெறும் இடத்திற்குள் மட்டும் ஒலியை மட்டுப்படுத்துமாறும், கற்றல் செயற்பாட்டை பாதிக்காத வகையில் நிகழ்வை நடத்துமாறும் நிகழ்வுக்கான கால நீடிப்புகளை வழங்க வேண்டாம் எனவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜய சோமமுனிக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி கல்விப் பொதுச் சாதாரண தரப்பரீட்சை ஆரம்பிக்கவுள்ள நிலையில் தற்போது இடம்பெற்று வரும் களியாட்ட நிகழ்வுகளுக்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# கொழும்பில் தமிழரசு போட்டியிடுவதா? நாளை மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்வைத்த வேண்டுகோளுக்கு மிகுந்த வரவேற்பு கிட்டியிருப்பதாகத் தெரிவித்திருக்கும் அக்கட்சி, அவ்விடயம் தொடர்பில் நாளை வவுனியாவில் நடைபெறும் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஒரு முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் கொழும்புக் கிளை தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

குறுகிய கால அவகாசத்தினுள்ளே நாம் எதிர்பார்க்காத விதத்தில் அனேக தமிழ் உறவுகள் கொழும்பில் எமது கட்சியின் சார்பில் களமிறங்குவதற்குத் தமது விருப்பத்தைத் தெரிவித்து வருகின்றனர். அதிலும் விசேடமாக பல இளைஞர்களும் இஸ்லாமிய, சிங்கள மக்களும் கூட விருப்பம் தெரிவித்து வருவது நாம் எதிர் பார்க்காத ஒரு விடயம். எமது கட்சியுடன் கூட்டாகத் தேர்தலில் போட்டியிடுவதற்கான தமது விருப்பத்தைச் சில பதிவுசெய்யப்பட்ட தமிழர் மற்றும் தமிழரல்லாத கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும்கூடத் தெரிவித்துள்ளன.

கொழும்பு வாழ் மக்களின் - அதிலும் குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் - அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் தமிழர் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்கு தெற்கில் ஒரு களத்தைத் திறப்பதற்குமாகத் தம்மை அர்ப்பணிக்க முன் வந்திருக்கும் அனைவருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் கொழும்புக் கிளை நன்றி கூறுகிறது.

விருப்பம் தெரிவிப்பதற்கான இறுதி நாளாக இன்று இருக்கும் நிலையில் தேர்தல் தொடர்பான சகல தரப்புக் கருத்துக்களையும் ஆராயவென கட்சியின் மத்திய செயற்குழு வரும் ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் கூடவிருக்கின்றது.

கொழும்பு மாநகரசபைத் தேர்தல் தொடர்பிலான கள நிலைமை மற்றும் சாதக, பாதக அரசியல் நிலைமைகள் தொடர்பான பலதரப்பு விடயங்களும் மத்திய செயற்குழுவின் ஆலோசனைக்காக முன்வைக்கப்பட்டு ஆராயப்படும். அன்றைய தினமே இறுதி முடிவும் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# தாழ்வுபாடு கடற்படையினரால் 14 இந்திய மீனவர்களும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்டு, தாழ்வுபாடு கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில்,அவர்கள் பின்னர் மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து படகு ஒன்றில் தென் கடல் பகுதியில் மீன் பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்களை நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர்.

பின்னர் அவர்கள் தாழ்வுபாடு கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டனர்.

தாழ்வுபாடு கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை அந்த மீனவர்களை மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இதன் போது இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலய அதிகாரிகள் மன்னாருக்கு வருகை தந்து அந்த மீனவர்களைப் பார்வையிட்டமையோடு,அவர்களுக்குத் தேவையான உதவிகளை முன்னெடுத்தனர்.

மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் மீனவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.




# கரைவலையில் நேற்றுப் பிடிபட்ட ஆயிரக்கணக்கான பாறை மீன்கள்

## உடப்பை அண்மித்த முத்துப்பந்திய கிராம கரையோரத்தில்

**(உடப்பு க.மகாதேவன்)**

உடப்பை அண்மித்த முத்துப்பந்திய கிராமத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பகல் தனியார் ஒருவருக்குச் சொந்தமான கரைவலையில் ஆயிரக்கணக்கான வெண்பாறை மீன்கள் பிடிக்கப்பட்டு கரை சேர்க்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மீனும் சுமார் 5கிலோ தொடக்கம் 8 கிலோ வரை நிறை கொண்டதாகக் காணப்பட்டது. பிடிக்கப்பட்ட மீன்கள் எல்லாம் உடப்பு பகுதியிலுள்ள கரைவலை மீன் வாடிகளுக்கு விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட நிலையில் ,கொழும்பு சந்தைக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.









# கிழக்கு இருதய நோயாளிகளை யாழ். அனுப்பும் அவல நிலைமை

## நாடாளுமன்றில் ஹிஸ்புல்லாஹ் எம்.பி. தெரிவித்த தகவல்

(எஸ். சினீஸ் கான்)

கிழக்கு மாகாணத்தில் இருதய நோயாளர்கள் அஞ்ஜியோகிராம் பரிசோதனை மேற்கொள்ள ஒரு வைத்தியசாலையில் கூட அவ்வசதியில்லை. யாழ்ப்பாண வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியிருக்கின்றனர். அதனால் இது தொடர்பில் கவனஞ்செலுத்தி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இவ்வசதியை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.



நாடாமன்றத்தில் நேற்று முன்தின்ச்ன் வியாழக்கிழமை இடம்பெற்ற சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிதியொதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் –

கிழக்கு மாகாணத்தில் இருதய நோயாளர்கள் அதிகமாக இருக்கின்றனர். ஆனால், அவர்கள் அது தொடர்பான பரிசோதனை செய்வதற்கு கிழக்கு மாகாணத்தில் அரச வைத்தியசாலைகள் எதிலும் அவ்வசதிகளில்லை.


கிழக்கிலிருக்கும் மிகப்பெரிய வைத்தியசாலையான மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கூட அவ்வசதியில்லை.

கிழக்கு மாகாணத்திலிருக்கும் இருதய நோயாளர்கள் இப்பரிசோதனையை மேற்கொள்ள யாழ்ப்பாண வைத்தியசாலைக்கே அனுப்பப்படுகின்றனர்.

இதனால் யாழ்ப்பாண வைத்தியசாலை ஒட்டுமொத்த வடக்கு, கிழக்கு இருதய நோயாளர்களுக்கும்ப் இந்த பரிசோதனையை மேற்கொள்ள இருப்பதால் ஒவ்வொரு மாதத்துக்கும் 8 பேருக்கே பரிசோதனைக்கு அனுமதி வழங்குகிறார்கள்.

இதன் காரணமாக, ஆயிரக்கணக்கான நோயாளர்கள் ஒன்றரை அல்லது இரண்டு வருடங்கள் வரை காத்திருக்க வேண்டியிருக்கின்றனர்.

அதற்கிடையில் நூக்கணக்கான நோயாளர்கள் மரணித்து விடுகின்றனர். அதனால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் என்ஜியோகிராம் பரிசோதனையை மேற்கொள்ள முடியுமான வசதியைச்செய்து கொடுக்க வேண்டும். எனக் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.




# மாணவர்களைக் கட்டாயப்படுத்தி இறக்கிய அரச பஸ்ஸின் நடத்துனர் பணியிடைநீக்கம்

(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

பாடசாலை மாணவர்களை அரச பஸ்ஸில் இருந்து கட்டாயப்படுத்தி இறக்கிய பஸ்ஸின் நடத்துனர் பணியிடைநீக்கம் செய்யப்பட்டார். அந்த நடத்துனருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனெ போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தாம் நாடாளுமன்றில் ஆற்றிய உரையின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்

அரச பஸ்ஸில் இருந்து பாடசாலை மாணவர்களை வெளியேறுமாறு வலியுறுத்திய காணொலி ஒன்று சமூக வலைத்தளத்தில் வைரலாகியதை அடுத்து பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்புப் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் போக்குவரத்து அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு அதனைக் கொண்டு வந்தார். அதனை அடுத்தே அந்த பஸ்ஸின் நடத்துனர் தற்போது தற்காலிகமாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.



இது சம்பந்தமான உரிய விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.



# புல்மோட்டை கனிய மணல் தொழிற்சாலையில் சம்பளம் கோரி ஊழியர்கள் நேற்றுக் கவனவீர்ப்பு

திருகோணமலை மாவட்ட புல்மோட்டை கனிய மணல் தொழிற்சாலையில் புதிதாக நியமிக்கப்பட்ட 83 பேருக்கு கடந்த 9 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாததால் அவர்கள் அமைதியான முறையில் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

கடந்த அரசாங்கத்தின் போது நியமனம் வழங்கப்பட்டிருந்த நிலையில், அந்த ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமல் இருப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தங்களுடைய குடும்பங்கள் சாப்பாட்டுக்கு கூட கஷ்டப்பட்டு வருகின்றன எனவும் பிள்ளைகளைக் கற்பிப்பதற்கு கூட வசதியின்றி இருப்பதாகவும் தமது கவலைகளை வெளிப்படுத்துகின்றனர்.

தேர்தலின் போது புதிய அரசாங்கத்திற்கு தங்களுடைய தேவைகள் நிறைவேற்றப்படும் என்ற நோக்கில் அயராது பாடுபட்டு வாக்குகளை அள்ளி வழங்கியிருந்த போதிலும் தற்போது தாங்கள் கவனிப்பாரற்ற நிலையில் இருக்கின்றனர் எனவும் கவலையை வெளிப்படுத்துகின்றனர்.

இந்தக் கனிய மணல் கூட்டுத்தாபனத்திற்கு வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி கடந்த மாதமளவில் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்குள்ள ஊழியர்களுடன் கலந்துரையாடியமையுடன் எதிர்காலத்தில் முறையான சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.











# இன்றைய ராசி பலன்கள் - 08.03.2025




உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைப்பது அரிது. இன்று சௌகரியங்களை இழக்க நேரலாம். அது உங்களுக்கு கவலையைத் தரும். இன்று சராசரியையும் விட சற்று மேலான நாள்.

பணியில் திறம்பட செயலாற்ற ஒழுங்கான நடைமுறையைப் பின்பற்ற வேண்டியது அவசியம். அது நீங்கள் வெற்றி பெறுவதற்கான வழிகாட்டியாக அமையும்.

இன்றைய நாள் நல்லுறவிற்கு சாதகமாக காணப்படாது. அலுவலகப் பணிச்சுமை மற்றும் உடல் நலக்கோளாறு காரணமாக உறவில் பாதிப்பு ஏற்படும்.

இன்று பணம் அதிக அளவில் செலவாகும்.எனவே திட்டமிட்டு பயனுள்ள வகையில் பணத்தைச் செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். அஜீரணக் கோளாறு காணப்படும். அதனால் அசௌகரியம் ஏற்படும்.




இன்று தடைகளும் தாமதங்களும் காணப்படும். முக்கியமான முடிகளை தள்ளிப்போடுவது நல்லது. ஓய்வு நேரத்தில் இசையைக் கேட்டு இன்புறுங்கள்.

இன்று பணியிடச் சூழல் சாதகமாக இல்லை.உங்கள் சக பணியாளர்களுடன் ஒத்துப் போவதன் மூலம் உங்கள் பணிகள் சுமுகமாக நடக்கும்.

காதலில் சுமுகமான உறவு இருக்காது. உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும் வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றது.

இன்று வீட்டை புதுப்பிப்பதற்கு பணம் செலவாகும். எனவே கட்டுக்கடங்காத செலவினங்கள் காணப்படும்.

கால்வலி மற்றும் முதுகு வலி காணப்படலாம். ஓய்வும் அமைதியும் தேவை.




இன்றைய நாள் சீராக இருக்கும். இன்று அமைதியான மனநிலை காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கியமான முடிவுளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

இன்று பணியில் நற்பலன்கள் கிடைக்கும். மேலதிகாரிகள் உங்கள் திறமைகளைப் பாராட்டுவார்கள்.

இது காதலுக்கு உகந்த நாள். உங்கள் காதல் உணர்வுகளை வெளிப்படையாக காண்பிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி அனுகூலமாக இருக்கும்.நீங்கள் புத்திசாலித்தனமாக பணத்தை கையாளுவீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்ல தேகநிலை காணப்படும்.




இன்று லாபகரமான நாளாக இருக்கும். புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் இருப்பீர்கள். புதிய முயற்சிகள் இன்று லாபத்தை அளிக்கும்.

இன்று வேலைவாய்ப்புகள் மிகவும் நன்றாக இருக்கும் மற்றும் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் தொழில் முறையுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை கையாள்வீர்கள். இதன் மூலம் உங்கள் துணை உறவின் மதிப்பை உணர்ந்து கொள்வார்.

உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் போதுமான பணம் காணப்படும்.அதிக சேமிப்பும் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய நாள் சாதகமாக இல்லை. இன்று படபடப்புடன் காணப்படுவீர்கள். நீங்கள் எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு அனுசரித்து நடந்து கொண்டால் அனைத்தும் நன்றாக இருக்கும். முக்கியமான முடிவுகள் அல்லது புதிய முயற்சிகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணியிடத்தில் சூழ்நிலை சாதகமாக இருக்காது. உங்கள் சகபணியாளர்களுடன் மோதல்கள் ஏற்படலாம்.

உங்கள் வீட்டின் புணரமைப்பு அல்லது வளர்ச்சி குறித்து உங்கள் தாயிடம் விவாதிப்பீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

பணவளர்ச்சி சிறப்பாக காணப்படாது. தேவையற்ற செலவினங்களை சந்திக்க நேரிடும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலைவலி அல்லது உயர் அழுத்தம் காணப்படலாம்.




இன்றைய நாள் சிறந்த நாளாக அமையாது. சில அசௌகரியங்களை உணர்வீர்கள். உங்கள் கவலை மற்றும் பாதுகாப்பற்ற உணர்வை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் தேவையில்லை. நேர்மறையாக எண்ணுவதன் மூலம் நீங்கள் சாதிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை மிகவும் தைரியத்துடனும் நேர்மறை எண்ணங்களுடனும் ஆற்றுவீர்கள். அதனால் பணியில் ஏற்படும் தடைகளைத் தாண்டி வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையை சமாதானப்படுத்துவதை கடினமாக உணர்வீர்கள். எனவே அவரை சந்திப்பதை தவிர்ப்பது நல்லது.

பணவரவுக்கான வாய்ப்பு இல்லை. இன்று செலவினங்கள் அதிகமாக இருக்கும்.




இன்றைய நாள் சீராக உள்ளது. திருப்தி கிடைப்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள். உங்கள் வேலைக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

ஒரு நல்ல முடிவுக்கு வருவதன் மூலம் உங்கள் வாழ்க்கையின் போக்கை நீங்கள் தீர்மானிக்க முடியும். உங்கள் பிரியமானவரை சந்திப்பதன் மூலம் இது சாத்தியம்.

பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் முகத்தில் உற்சாகம் நிறைந்து காணப்படும்.

நல்ல ஆற்றலும் மனஅமைதியும் காணப்படும். அதனால் ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.




இன்று மிகவும் நல்ல நாள். புதிய நண்பர்கள் மற்றும் அவர்களது ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். அது உங்களுக்கு பயனுள்ள முன்னேற்றத்தை அளிக்கும். வசதிகளும் மகிழ்ச்சியும் கிடைக்கும். தியானம் மேற்கொள்வது மிகவும் சிறந்தது.

இன்று ஓய்வின்றி உழைப்பீர்கள். சவாலான சில பணிகள் உங்கள் திறமைகளை சோதிக்கும். உங்கள் பணியில் நீங்கள் நன்கு வளர்வீர்கள்.

உங்கள் துணையுடனான உறவு சிறந்த முறையில் இருக்கும். இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவும் செலவும் சேர்ந்து காணப்படும். பணத்தை கவனமுடன் கையாள வேண்டும்.அதிக சிரமங்கள் காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் - 08.03.2025




இன்றைய நாள் சாதகமாக இல்லை. இன்று நீங்கள் மிகவும் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். அதனை தவிர்க்க வேண்டும். இயல் பாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது உங்களுக்கு மிகவும் நல்லது.

சகபணியாளர்களுடன் சில மோதல்கள் காணப் படும். நீங்கள் மேற்கொண்டிருக்கும் உங்கள் பணி சம்பந்தமாக சில பதட்டங்கள் உங்களிடம் காணப் படும்.

உங்கள் துணையை சந்திப்பதை தவிர்த்தல் நலம். சூடான விவாதங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

பணவளர்ச்சி சிறப்பாக இருக்காது. பணஇழப் பிற்கான வாய்ப்புகள் உள்ளன.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். இரவில் குறைந்த தூக்கம் காணப்படும். அதனால் ஓய்வின்மை காணப்படும்.




இன்றைய நாள் உங்களுக்கு துடிப்புடன் இருக்காது. ஆன்மிக காரியங்கள் மற்றும் பிரார்த்தனை உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்தால் துடிப்புடன் உணரலாம். பொறுமை மற்றும் உறுதியான அணுகுமுறை தேவை.

பணியைப் பொறுத்தவரை சாதகமாக இல்லை.அதி கரிக்கும் பணிச்சுமை கவலையை அளிக்கும். உங்கள் சகபணியாளர்களிடம் நல்லுறவு பராமரிக்க இயலாது.

உங்கள் துணையை சந்திப்பதை தவிர்த்தல் நலம். உங்களிடம் காணப்படும் கருத்து வேறுபாடு காரணமாக இருவருக்கிடையே மோதல்கள் ஏற்படும்.

இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும். அதிக மான எதிர்பார்ப்புகள் கூடாது.

ஆரோக்கியம் சிறப்பட‌ன் இருக்காது. தோல் சம்பந் தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் கால் வலி காணப்படும்.




இன்று மிகவும் அனுகூலமான நாள் இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை எதிர் பார்க்கலாம். முக்கியமான முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

சிறப்பாகப் பணியாற்றுவதற்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள் ளுங்கள். சிறந்த பலனைக் காண்பீர்கள். உங்கள் மேலதி காரியிடம் நற்பெயர் சம்பாதிப்பீர்கள்.

இன்றைய தினத்தை மகிழ்ச்சிகரமானதாக ஆக்கு வீர்கள். உங்கள் துணையுடன் புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் கிடைக்கும். உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். நீங்கள் ஸ்திரமாகவும் அதிக திடத்துடனும் காணப் படுவீர்கள்.




இன்றைய நாள் சாதகமாக இல்லை. ஆன்மீக பயணங்கள் மூலம் இன் றைய நாளை நீங்கள் சாதகமான நாளாக மாற்றிக் கொள்ளலாம். அதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். பணியிடத்தில் நீங்கள் அதிக பொறுப்பு களை சுமக்க வேண்டியிருக்கும்.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் காட்டு வீர்கள். அதனால் எந்தப் பயனும் இல்லை. அதனை தவிர்த்தல் நலம்.

இன்று பண இழப்புகள் ஏற்படும். பணத்தைக் கையாள்வதில் விழிப்புணர்வு அவசியம்.

மனதில் காணப்படும் பதற்றம் காரணமாக கால்களில் வலி காணபட்டும்.

# வட,கிழக்கில் இராணுவத்தின் பிடியிலுள்ள மாவீரர் துயிலுமில்லங்களை விடுவியுங்கள்

## ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் கோரிக்கை

**(விஜயரத்தினம் சரவணன்)**

மாவீரர்களுடைய உறவுகளும், தமிழ் மக்களும் மாவீரர்களை விதைத்த இடத் தில் கண்ணீர் சிந்தி நினைவு கூருவ தற்காக, வடக்கு, கிழக்கில் இராணு வத்தின் கையகப்படுத்தலில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களை விடு விக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரன் அமைச்ச ரும், நாடாளுமன்ற சபை முதல்வரு மான விமல் ரத்நாயக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம் பெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரி விக்கும்போதே நாடாளுமன்ற உறுப் பினர் ரவிகரன், இக்கோரிக்கையை முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

இறந்தவர்களை நினைவு கூருத



லென்பது அங்தந்த சமயங்களுக்கேற்ப மக்கள் செய்து வருவது வழமையாகும்.

எங்களுடைய மக்கள் வடக்கு, கிழக்கில் நவம்பர்-27 அன்று துயிலு மில்லங்களிலும், மே-18அன்று முள்ளி வாய்க்காலிலும் நினைவு கூருவார்கள்.

கடந்த வருடம் உங்களுடைய ஆட்சி யில் தடைஇல்லாமல் உணர்வுபூர்வ மாக நவம்பர் 27 நாளை நிம்மதி யாக நினைவு கூர்ந்தார்கள்.

துயிலுமில்லங்கள் சிலவற்றில் இராணுவத்தினர் இருக்கின்றார்கள். இராணுவத்தினர் எண்ணிக்கையும் வடக்கு, கிழக்கில் அதிகமாகவும், முல் லைத்தீவில் இன்னும் அதிகமாகவும் – இரண்டு குடிமக்களுக்கு ஒருபடையினர் என்ற விகிதத்திலும் உள்ளனர் எனப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மக்கள் தங்களுடைய உறவுகளை எண்ணி நினைத்து, ஒருசெட்டுக் கண்ணீர் சிந்தி, தமது மனத்தை ஆறுதல் படுத்துவதற்கு, இராணுவம் அத்துமீறி கையகப்படுத்த. வைத்துள்ள முள்ளிய வளை, அளம்பில், தேராவில், ஈச்சங் குளம் உள்ளிட்ட வடக்கு, கிழக்கிலுள்ள இன்னும் சில துயிலுமில்லங்களையும் விடுவியுங்கள். வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் சார்பாக இந்தக் கோரிக் கையை முன்வைக்கிறோம். – எனவும் தெரிவித்தார்.